205

உ

கடவுள் துணை.

இருவர் குடும்ப சம்பாஷணைகள்.

விருதுபட்டி மகா-ள-ஸ்ரீ

சி. ச. சுப்பைய நாடார்

அவர்கள் எழுதியது.

விருதுபட்டி மகா-ள-ஸ்ரீ

வே. வ. சண்முகநாடாரவர்களால்,

விருதுபட்டி ஸ்ரீமான்

இராமலிங்கக்குருக்கள் அவர்களது,

சச்சிதானந்த அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1914.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED ... 1914 MADRAS

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
சென்னை-600 008
O-,5MSU3, I
N14

உ

ராமனுக்கும், கோவிந்தனுக்கும்,

சம்பாஷணை.

MADRAS.

இரண்டுபேரும், ஒரே பள்ளிக்கூடத்தில் வாசித்தவர்கள்; ஏககாலத்தில், ரெயிலில் பிரயாணஞ்செய்யும்போது நடந்த சம்பாஷணைகள்.

மணியாச்சி ஸ்டேஷன்.

ராமன்:—தம்பி கோவிந்தா, ஏது திருநெல்வேலியிலிருந்து வந்த ரெயில் பத்துநிமிஷம் காலதாமதப்பட்டு வந்திருக்கிறது: உன்னைக்கண்டு ரொம்பக் காலமாச்சே, க்ஷேமந்தானா? ஏன் இப்படி அவஸ்தைப்பட்டு சாமானை நீயே தூக்கிக்கொண்டு வருகிறாய்; துணைக்கு ஒரு ஆள் கூட்டிக்கொண்டு வரவில்லையா?

கோவிந்தன்:—அண்ணா திருநெல்வேலிப்பாலத்துக்கும், தாழையூற்றுக்கும், இடையில், லயன் ரிப்பேர் செய்துகொண்டிருக்கிறார்கள், அதனால்தான் ரெயில் காலதாமதமாய் வந்தது; தங்களுடைய ஆசீர்வாதத்தால் க்ஷேமந்தான். சாமானைத்தூக்கிவருகிற விஷயம் அவஸ்தையொன்றுமில்லை, துணைக்காக ஆள்வேண்டிய அவசரமுமில்லை, அந்தப்படி கூட்டிக்கொண்டு வரவுமில்லை

ராம:—தம்பி ஊரிலிருந்து தான் வருகிறாயா? (திருநெல்வேலி) எந்தவூருக்குப்பிரயாணம், 3-வது வகுப்பு டிக்கட்டுத்தான் வாங்கிவந்தாயா? உன்னுடைய கஞ்சத்தனம் இன்னும் இப்படியாயிருக்கிறது?

கோ:—அண்ணா, ஊரிலிருந்துதான் வருகிறேன், மதுரைக்குப் போகிறேன், ரெயிலில், குறைந்த வகுப்பு 3-க்குக் கீழில்லை; இனிமேல் வகுப்பைப்பற்றி ஏன் கவனிக்கவேண்டும்.

ராம:—தம்பி கோவிந்தா 3-வது வகுப்புப்பிரயாணியாகிய உன்னோடே நான், பேசிக்கொண்டிருப்பதுகூட எவ்வளவோ கௌரவக்குறைச்சலான காரியம், உன்னோடு கொஞ்சம் பேசிக்கொண்டு போகவேண்டியதிருப்பதால், உன்னுடைய டிக்கட்டைக்கொடு...

வைச் செய்வோம்; (டிக்கட்டை வாங்கிக் கொண்டான்.) அடா, கோபாலா, இங்குவா (தன்னுடைய வேலைக்காரன்,) இந்த 3-வது வகுப்பு டிக்கட்டை அதோ நிற்கிற காடிடம் கொடுத்து 2-வது வகுப்புப் பிரயாணத்திற்காக எழுதி வாங்கிக்கொண்டுவா, இந்தப் பத்து ரூ நோட்டைக்கொடுத்து மீதப்பணத்தையும் வாங்கு. (டிக்கட்டை மாற்றியாகிவிட்டது)

கோ:—அண்ணா, அனாவசியமாய் இவ்வளவு பணத்தைக் கொடுத்து ஏன் டிக்கட்டை மாற்றினீர்கள்?

ராம:—தம்பி கோவிந்தா, நம்முடைய தேகசௌகரியத்திற்காகச் செலவு செய்வதையெல்லாம் அனாவசியமென்று வேறு என்னசெயப் போகிறாயோ தெரியவில்லை, வண்டி பாசாகப் போகிறது, ஏறிக்கொள், உட்கார்ந்து கொள்வோம் (வண்டி பாசாகி விட்டது.) மணி பன்னிரண்டா ஆகிவிட்டதே அடா கோபாலா, உன்னிடத்தில் பணமிருக்கிறதா? அல்லது இந்த ஒரு ரூபாவுக்கும் அய்யர் கடையிற்போய்ப் பட்சணம் வாங்கிக்கொண்டுவா?

கோ:—அண்ணா, எதற்காக பக்ஷணம் வாங்கச்சொல்லுகிறீர்கள், எனக்காக ஒன்றும் வேண்டியதில்லை.

ராம:—தம்பி உன்னிடத்தில் பணம் கேட்பேனென்று பயந்துபோனதுபோல் தெரிகிறது, யோசிக்கவேண்டாம், உன்னிடம் ஒரு காசுகூடக் கேட்கவில்லை.

கோ:—அண்ணா, சற்றுநேரத்திற்கு முன்னாடித்தான் ஆகாரம் பார்த்துக்கொண்டு வந்தேன்' மத்தியகாலங்களில் விசேஷமாய் ஒன்றும் வைத்துக்கொள்ளுகிறதில்லை,

ராம:—உன்னுடைய குடும்ப விஷயமாய் நான் முழுதும் தெரிய விரும்புகிறேன்.

கோ:—அண்ணா, தங்களுக்குத் தெரியாத காரியமாக வைத்துக் கொள்ளக் கொஞ்சமும் எனக்குச் சம்மதமில்லை,

ராம:—தம்பி உனக்குக் குழந்தையுண்டா?

கோ:—அண்ணா எனக்குக்குழந்தையுண்டு, ஆண் 3. பெண்

ராம:—தம்பி உன்னுடைய குழந்தைகளுக்கு வயதென்ன

அண்ணா, முதல்குழந்தை ஆண் வயது 28. 2-வதுகுழ

ந்தை ஆண் வயது 26. 3-வது குழந்தை ஆண் வயது 18. 4-வது குழந்தை பெண் வயது 16. 5 வது குழந்தை பெண் வயது 12.

ராம:—எல்லாக் குழந்தைகளும் படித்திருக்கிறார்களா? கலியாணங்களு முடிந்திருக்கிறதா?

கோ:—அண்ணு, [முதலாவது குழந்தை ராமசாமி பி. ஏ. பிளீடர் பரிக்ஷையும் பாஸ் செய்து வக்கீல் பரிக்ஷையுங் கொடுத்திருப்பதோடு 25-ம் வயசில கலியாணமுமுடிந்திருக்கிறது. 2-வது குழந்தை மாணிக்கவேல், எப். ஏ. பாஸ் செய்து டாக்டர் பரிக்ஷையும் கொடுத்திருக்கிறான். இவனுக்கு சமீபத்தில், கலியாண முடிப்பதாக உத்தேசித் திருக்கிறது. 3-வது குழந்தை சுந்தரம், மெற்றிக்குலேஷன், பாஸ் செய்து, மேல் வகுப்புக்குப் படிக்கப் போகிறான். 4-வது குழந்தை தமயந்தி, 7-வது வகுப்புவரை படித்திருப்பதோடு சென்ற வருஷத்தில் கலியாணமு முடிந்திருக்கிறது. 5-வது குழந்தை லட்சுமி 6-வது வாசிக்கிறாள்.

ராம:—உனக்கு ஆஸ்தி யென்ன வுண்டும் வருஷத்தில் வரும்படி யென்னவரும்?

கோ:—அண்ணு, என்னுடைய ஆஸ்தியும் வரும்படியும் அவ்வளவு பெரிதான தல்ல, மேலும் இதைத் தாங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசரமுமில்லையே.

ராம:—உன்னுடைய ஆஸ்தியையும், வரும்படியையும், பெரிதாகமதித்துக் கேட்கவில்லை, சொல்லிவிட்டால் நான் எதேனும் பறித்துக்கொள்ளுவேனென்று பயந்து போகவேண்டாம், நாமிருவரும் சிறுவயதில் பழகிக்கொண்ட பிரியத்திற்காக உன்னுடைய காரியத்தைக் கேட்டுச் சந்தோஷமடையத்தான் கேட்டது; உண்மையைச் சொல்வதில் என் யோசிக்கிறாய்?

கோ:—அண்ணு, உண்மையைச் சொல்வதில் எனக்கு ஒரு யோசனையுமில்லை சொல்லுகிறேன், எனக்கு 20 சக்கிலி நஞ்சையும் 15 சக்கிலி புஞ்சையும், மாசம் 100 ரூ. வாடகை வரக்கூடிய கட்டிடங்களும், ரொக்கம் ரூ. (20000) முமிருக்கிறது. ராமசாமி வக்கீல் வேலையிலிருந்து செலவு நீக்கி மாசம் 1-க்கு ரூ. 200-வீதமும் மாணிக்கவேல் வைத்திய சாலையிலிருந்து செலவு நீக்கி மாசம் 1-க்கு ரூ. 275 வீதமும் வந்து கொண்டிருக்கிறது.

ராம:—குடியிருப்பு வீடு நன்ருய்க் கட்டியிருக்கிருயா? எவ்வளவு பணம் செலவிட்டுக் கட்டியிருக்கிருய் !!

கோ:—எங்களுடைய இஷ்டத்திற்குத் தகுந்தபடி ரூ. இரண்டாயிரம் செலவு செய்து நன்ருகத்தான் கட்டியிருக்கிறேன்.

ராம:—இரண்டாயிர ரூபாய்ச் செலவில், நல்ல வீடாகக் கட்டிவிட்டதாகச் சொல்லுகிருயே அது வுனக்குத்தான் நயமாகத் தெரியலாம்.

கோ:—எனக்கு நயமாகத் தெரியும்படிதானே நான் வீடு கட்டிக்கொள்ளவேண்டும்.

ராம:—நீ வீடு கட்டினதைப்பற்றிச் சொன்னதுபோதும், உன்னுடைய குடும்பத்திற்கு மாசம் ஒன்றுக்கு எத்தனை ரூ. வீதம் செலவாகிறது.

கோ:—எங்கள் குடும்பத்திற்கு மாசம் 30 ரூ. வீதம் செலவாகிறது.

ராம:—தம்பி கோவிந்தா நீ சொல்லுவது மிகுந்த ஆச்சரியமாகவிருக்கிறதே எனக்கு மட்டும் பூட்ஸ், வேஷ்டி, சட்டை, தலைப்பாகை, இவைகளுக்கு மாத்திரமே மாசம் 1-க்கு ரூ 50-க்கு மேற் செலவாகிறதே?

கோ:—அண்ணு தங்களைப்போல் மற்றவர்களேயும் நினைத்துப் பேசலாமா?

ராம:—நீ சொன்னது நியாயந்தான், உன்னுடைய ரொக்கப்பணம் எவ்விதமாக வைக்கப்பட்டிருக்கிறது.

கோ:—என்னுடைய ரொக்கப்பணத்தில் சில பாகத்தை வரும்படியான சொத்தின் பேரில், ஈடாகவும், மற்றதைச் சரியான சிலபுள்ளிகளிடம், சாமீன் நோட்டின் பேரிலுமாகக் கொடுத்திருக்கிறேன்.

ராம:—என்ன வட்டி பேசிக் கொடுத்திருக்கிருய்?

கோ:—பெரும்பாலும் அரை வட்டியாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது,

ராம,—ஏன் இப்படிக்குறைந்த வட்டிக்குக் கொடுத்தாய்? என்னிடம் தருவதானல், உன்னுடைய தாட்சண்யத்திற்காக ஒன்று சேர்த்துக்கொடுக்கிறேன

கோ:—எனக்கு அதிக வட்டி வாங்குவதற்கு இஷ்டமில்லை.

ராம.—உன்னுடைய குமாரன் ராமசாமி கலியாணத்திற்கு எவ்வளவு ரூபா செலவாகியிருந்தது.

கோ:—அண்ணா சுமார் ரூ. 400 வரை கலியாணத்திற்கு செலவாகியிருந்தது:

ராம:—தம்பி கோவிந்தா, நீ சொல்வதெல்லாம் வேடிக்கையாக இருக்கிறதே, உனக்கு இரண்டு லட்சம் ரூபா ஆஸ்தியிருப்பதோடு மாஸ்தையில் 750 ரூபா வீதம் வரும்படி வந்துகொண்டிருந்தும் 400 ரூபாச் செலவில் கலியாணமுடித்ததாகச் சொல்கிறாயே, உன்னைப் போல் லோபியை வேறெங்கும் காணமுடியாது, என்னுடைய வேலையாட்களில் மாசம் 1-க்கு இருபது ரூபாச் சம்பளத்தில் குதிரைச் சாரத்தியம் செய்பவன் வீட்டுக் கலியாணத்திலல்லவா ரூபா இரண்டாயிரம் செலவாகியிருக்கிறது.

கோ:—அண்ணா, மாசம் இருபது ரூபாச்சம்பளத்திலுள்ளவன் ஒரு கல்யாண விஷயத்தில் இரண்டாயிரம் ரூபா செலவு செய்ததாகச் சொல்லுகிறீர்களே? அவனுக்கு கல்யாணச்செலவு ரூபா இரண்டாயிரமானால் மற்றச் செலவுகளும், இப்படித்தானே கூடுதலாக விருக்கும், பணத்துக்கு வேறு வகையான வரும்படியுண்டா? அல்லது முன்னோர்களின் ஆஸ்திகண்டா அதிகம் உண்டா? அப்படி முன்னோர்களின் ஆஸ்தி யதிகமாக விருக்கும்பக்ஷம் அதை வைத்து விர்த்திசெய்து கொண்டிருக்கலாமே யொழிய இருபது ரூபாச் சம்பளத்திற்கு குதிரைச் சாரத்தியம் செய்ப வரவேண்டியதில்லையே' இதனுடைய ரகசியத்தை யறிய விரும்புகிறேன்.

ராம:—உனக்கு ரகசியம் சொல்ல வேண்டியது மாயிருக்கிறது, நீ பிரத்தியார் விஷயத்தைச் சரிபார்த்தது போதும் ஏதாவது தருமம் செய்திருக்கிறாயா? சத்தியமாய்ச் சொல்.

கோ:—என் பேரில் ஏதோ தாங்கள் கோபங் கொண்டிருப்பது போல் தெரிகிறதே நீங்களெல்லாம் இப்படி நினைக்கப்படாது. நான் தருமஞ் செய்திருப்பது என்னுடைய ஆஸ்தியிலிருந்து ரூபா பதினாயிரம் எடுத்துப் பண்டாக வைத்து இரண்டு பெண் பாடசாலை வைத்து நடத்தி வருகிறேன், சுமார் 500 குழந்தைகள் வாசிக்கிறது, ஐந்தாவது வகுப்பு முடிய பீசில்லாமல் சொல்லிக்கொடுப்பதன்றி,

ராம:—தருமமானது இவ்விதம் பெண்பிள்ளைகளுக்குச்சொல்லிக்கொடுப்பது தான் மேலானதென்று நினைத்தாயோ?

கோ:—தருமத்தில் வித்தியா தருமந்தான் சிலாக்கியமானது, மற்றவகைகளெல்லாம் இதைப் போலல்ல அநேகமாய் ஏமாற்றுக்காரர்கள் கையில் போய்ச் சேரக் கூடியதாகத்தான் பெரும்பாலுமிருக்கிறது.

ராம:—தம்பி கோவிந்தா நீ பள்ளிக்கூடம் வைத்தது சரி, ஏதாவதுபெரிய ஸ்தலங்களுக்குப்போய் தானதருமம் செய்திருக்கிறாயா?

கோ:—அண்ணா, நீங்கள் குறிப்பிடுகிற மாதிரி பெரியஸ்தலங்களில் ஒன்றாகிய பஞ்சவடி என்னும் நாசக் போயிருந்தேன், அங்கே உலகத்திலில்லாத ஏமாற்றுக் காரத்திருடர்கள்தான் அந்த நதிக்கரையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்; அங்கு நடந்த காரியமனைத்தையும் பார்த்தேன், மனது சகிக்கவில்லை, முக்கியமான ஒருஇடத்தில் ஒரு சாஸ்திரி தங்களைப்போலாத்த ஒரு மகாப்பிரபுவை வைத்து சம்பாத்தியம் நடத்திக் கொண்டிருப்பதில் மேற்படி பிரபு தன்னுடைய தகப்பனார் அந்திய காலத்தில் ஏதோ மாம்பழத்தின்பேரில் இச்சை யிருப்பதாகச்சொன்னார் அந்தப்படி வாங்கிவருமுன்னடியே காலஞ்சென்றுவிட்டார். அதற்கு இனி என்ன செய்யலாமென்று சாஸ்திரியைக் கேட்டார், அதற்கு மேற்படி சாஸ்திரி சொன்னதாவது: உன்னுடைய தகப்பனார் இச்சைப்பட்ட மாம்பழத்துக்குப் பதிலாக சொக்கத் தங்கத்தினால் கெட்டியான பெரிய சைஸ் மாம்பழ மாதிரி செய்து எனக்குத் தானமாகக் கொடுத்துவிட்டால் உன்னுடைய தகப்பனைப் புசிப்பிக்கச் செய்தது போலாகி விடும், அதையும் சீக்கிரம் முடித்துவிடும், என்று சொன்ன மாத்திரத்தில், நான் பக்கத்திலிருந்த கொல்லன் பட்டரைக்குப் போய் ஒரு பழைய இருப்புத்தடியை சிப்பறக்கக் காயவைத்து, எடுத்துச் சாஸ்திரி முன்புக்குக் கொண்டு போனேன், அவர்மிரண்டு சங்கதியென்ன வென்றுகேட்டார் அதன் பேரில் என்னுடைய தகப்பனார் வலிப்பு வியாதியி லிருக்கும்போது மேற்படி வியாதியைப்போக்கும்பொருட்டு தீக்கோல் கொண்டு வருமுன்னுகக்காலஞ் சென்றுவிட்டார். அதிலிருந்து என்னுடைய மனக்குறைச்சல் நீங்காமலிருந்தது இப்பொழுது, தாங்கள் காலஞ்சென்றவர்களுக்காகக் கொடுக்கக்கூடியதை வாங்கிக் கொள்ளுவதாகச் சொ

ண்டு வந்திருக்கிறேனென்று சொன்னேன், சாஸ்திரி மிரண்டு நடுநடு ங்கி கொஞ்சம் யோசனை செய்து தனக்குச் சோலியிருப்பதாகவும், அடுத்த சாஸ்திரியிடம் போகும்படியாகவும் சொன்னார், பிரியமாய்த் தேடி வந்தவர்களுக்கு இப்படிச்சொல்லப்படாதென்றும், உடனேயெப் புக்கொள்ளவேண்டுமென்றும் வற்புறுத்திச்சொன்னேன், அவர் தப்பி ஓடிவிடுவதற்கு யோசனையாய் நாளையுந்தினம் நடத்திக்கொள்ளுவோ மென்று சொன்னார், நான் கூடாது இப்பொழுதே முடியவேணுமெ ன்று கண்டிப்புச் செய்தேன், சாஸ்திரியார் கும்பத்துக்கு மாங்குளை யில்லையென்பதுபோலும் தான் போய்க் கொண்டு வருவதாகவும், சொ ல்லி யெனக்குச் சாலை காட்டிப்பக்கத்திற் கூட்டிப்போய் ஐயா !! எங் களுடைய பிழைப்பு விபரமெல்லாம் தங்களுக்குத் தெரிந்திருந்தும், நீங்களெல்லாம் இப்படிச் செய்தால், நாங்கள் எப்படிப் பிழைக்கிறது எங்களுடைய தாய் தந்தையர்கள் எங்களை இப்படியேமாற்றுந் தன மான பித்தலாட்டத் தொழிலில் பழக்கிவிட்டார்களே !!. இனி யெங் கள் காலம் எப்படியும் பழக்கப்பட்ட மாதிரிதானே போகவேண்டிய திருக்கிறது; காலமோ விருந்தாப்பியமாய் விட்டது இனிமேல் வேறு வழிகளில் சீவனம் செய்யமுடியாது என்னுடைய பிள்ளைகளை நன் றாய் வாசிக்க வைத்திருக்கிறேன், அவனுடைய வாசிப்புக்குப் பணம் வேண்டியதுமிருக்கிறது, அவர்கள் படித்துத் தொழிலில் அமர்ந்து விட்டால் எனக்கு வேறு சம்பாத்தியம் வேண்டுவதில்லை, இப்பொ ழுது என்னுடைய பிழைப்பைக் கெடுக்கவேண்டாம், எங்களுக்குப் பணத்தையுங் கொடுத்து முன்னத்தில் மாடுபோல் குந்தியிருந்து கும் பிடும் போட்டுவிட்டுப் போகின்றார்களே அவர்களுடைய மதியீனத் தைப்பற்றியல்லவா கவனிக்கவேண்டும். ஆகிலும் இப்போது வருகிற வரும்படியில் தங்கமாம்பழத்தை வேண்டுமானாலும் தங்களுக்குத்தந் துவிடுகிறேன் என்று சொன்னார், அந்தமட்டில் சாஸ்திரிக்குப் புத்தி மதியைச்சொல்லி விட்டு, தீர்த்தக்கரையில் நல்ல தண்ணீரில்லாதபடி யால் வேறு இடந்தேடிப்போய் ஸ்நானஞ் செய்து சுவாமி தெரிசன ஞ்செய்து மறுபடியும் நதிக்கரை வந்து கல்வி அவசியமாகவும், முக் கியமாகவும், வேண்டுமென்றும், கல்வியிருந்தால்தான் தன்னையு மற் றவர்களையும், காப்பாற்றிக் கொள்ளலாமென்றும், ஒரு நீண்ட பிரச ங்கம் செய்தேன். சுமார் 800 ஜனத்துக்கு மேல்க் கூடி அன்போடு கேட்டார்கள்.

ராம:—தம்பி கோவிந்தா போதும் உன்னுடைய பிரசங்கத்தை நிறுத்து.

கோ:—அண்ணே இப்பொழுது நான் பிரசங்கஞ் செய்யவில்லை நடந்ததைப் பற்றித்தான் சொன்னேன்.

கோ:—தம்பி நடந்ததைப்பற்றி நீசொல்லாமலே உன்னைப்பார்த்தமட்டிலே மிகுந்த கொடையாளியென்றுதான் தெரிகிறது இதோ மதுரை ஸ்டேஷன் வந்துவிட்டது இறங்கிப்போகலாம், நீயிங்கு எவ்விடத்திற்குப் போகவேண்டும்? சோலியென்ன? திரும்ப ஊருக்கு எப்பொழுது பிரயாணம்?

கோ:—அண்ணா, பள்ளிக்கூடத்திற்கு வேண்டிய சில சாமான்கள் வாங்குவதற்காக வந்தேன், பெரியகடைவீதி போகவேண்டும், நாளையத்தினம் இரும்ப ஊருக்குப்பிரயாணம்.

ராம:—தம்பி கோவிந்தா இந்தமட்டில் வாய்க்காலுக்குப் போய்விட்டு கடை வீதிக்கு வரலாம் கூட வருகிறாயா?

கோ:—அண்ணா, இந்தமட்டில் வாய்க்காலுக்குப்போகலாம், தங்களுடைய குடும்ப விஷயத்தைப்பற்றி விபரந்தெரிய விரும்புகிறேன். ஆனால் கேட்கவும் யோசனையாயிருக்கிறது.

ராம:—தம்பி கோவிந்தா, எ[illegible]றகாக யோசனைப்பட வேண்டும், உள்ளதைப் பேசுவதில், யாருக்கு[illegible]தான் வருத்தம், சொல்லக்கூடிய விஷயத்தில் உன்னைப்போல் கூச்சப்படமாட்டேன்.

கோ:—அண்ணா, தங்களுக்குக் குழந்தைகளுண்டா?

ராம:—எனக்கு 30 வயதுள்ள ஆண்குழந்தை ஒன்றும், 23 வயதுள்ள பெண் குழந்தை ஒன்று மிருப்பதோடு, பௌத்திரர், பௌத்திரிகளுமுண்டு.

கோ:—குழந்தைகளெல்லாம் படித்திருக்கிறார்களா?

ராம:—படித்து உன்னுடைய பிள்ளைகளைப்போல் வக்கீல் வேலையிலும், வைத்தியத்தொழிலிலுமாக அலைந்து திரியவா, அல்லது கணக்குப்பிள்ளைக்கு பதிலாக எழுதிக்கொண்டு உட்கார்ந்திருக்கவா, எனக்கு எதில் குறைச்சலாயிருக்கிறது, உனக்கு விபரம் தெரியாதா?

கோ:—அண்ணா, தங்கள் மூலமாகத்தான் தங்களுடைய விபரத்தைத் தெரியவேண்டியதாயிருக்கிறது. என்னிடத்தில், வட்டிக்குப் பணம் கேட்டீர்களே! எதற்காக?

ராம:—உன்னிடத்தில் வட்டிக்குப் பணங்கேட்டதிலிருந்து நீரொம்பவும் யோசித்துவிட்டாயா? எனக்கு மிகுந்த வியாபாரமுண்டு, அது விஷயமாகத்தான் உன்னிடங்கேட்டேன்.

கோ:—அண்ணா, தங்களுக் ஆஸ்தியென்ன இருக்கும்.

ராம:—கஞ்சையும், கட்டிடங்களும், ஒரு லட்ச ரூபாய்க்கும், நகை வகையராக்கள் முப்பதாயிர ரூபாய்க்கும், மற்ற மாடு, குதிரை, வண்டி, வகையராச் சாமான்கள், பதினாயிர ரூபாய்க்கும், இருப்பதோடு பத்து லட்ச ரூபாவுக்கு வியாபாரத்தில், வரவு செலவு நடக்கிறது.

கோ:—அண்ணா, வியாபாரத்தில் சென்ற வருஷம் வரைக்கும் கணக்கு முடித்துப் பார்த்தமட்டில தங்கள் சொந்தப்பணம் எவ்வளவிருக்கிறது.

ராம;—வருஷந்தோறும், கணக்கு முடித்துப் பார்த்துப் பங்கு பிரித்துக்கொடுப்பதற்கு என்வியாபாரத்தில்வேறு கூட்டாளி கிடையாது நான் அடிக்கடி கணக்குப்பார்க்கிறதுமில்லை.

கோ;—அண்ணா கணக்குப் பார்க்காத கொண்டு விலையாக இருப்பது சரி, தங்கள் சொந்தப்பணம் ஏதாவதிருக்குமல்லவா?

ராம;—என்னுடைய தகப்பனார் காலஞ்சென்று எட்டுவருஷமாகிறது, அவர் ஜீவியகாலத்தில் எங்களிடம் ரொக்கம் ஒருலட்சருபாய் இருந்தது இப்பொழுது வியாபாரம் எவ்வளவோ பெருக்கமாக நடந்துவருகிறது.

கோ;—வியாபாரம் பெருக்கமாக நடப்பது சரி, வருஷம் ஒன்றுக்கு ஆதாயம் என்ன கிடைக்குமென்று நினைக்கிறீர்கள்.

ராம.—வியாபாரத்தில் வருஷம் ஒன்றுக்கு இருபதாயிர ரூபாய்க்குமேல் கிடைத்து வருகிறது.

கோ:—தங்களுடைய தகப்பனார் காலஞ்சென்றதிலிருந்து எட்டுவருஷத்திற்கும், தங்கள் குடும்பப் பற்றுவழி யென்ன ஆகியிருக்கிறது?

ராம.—என்னுடைய பற்றுவழி எட்டு வருஷத்திற்கும், ஒருலட்சத்து எழுபதினாயிரம், ரூபா ஆகியிருக்கிறதென்று கணக்குப் பிள்ளை இரண்டு மாஸனைதக்கு முன்னாடிச் சொன்னான்.

கோ.—எட்டுவருஷத்துக்கு ஒருலட்சத்து எழுபதாயிரமானால் வருஷத்திற்கு ரூபா இருபதினாயிரத்திற்கு மேலாகிறதே, இவ்வளவு செலவுக்குக் காரணமென்ன?

ராம;—பற்று வழிக்கணக்கு விபரம் எழுதிவைத்திருக்கிறது.

கோ.—பற்று வழியைப் பற்றியும் கவனிப்போம், வியாபாரத்தில் வட்டி கிட்டங்கி வாடகை சம்பளச் செலவு முதலானது வந்திருக்குமே இவைகளெல்லாம் வருஷத்திற்கு என்னவாகக் கூடும்?

ராம.—வட்டி கிட்டங்கி முதலாகிய கடைச் செலவுகள் வருஷத்தில் சுமார் பதிமூவாயிரம் வரலாம்.

கோ.—அண்ணா தாங்கள் சொல்லுகிறபடி கடைச்செலவு வருடத்தில் முப்பதாயிர ரூபாதான் வரக்கூடுமோ.

ராம.—நான் 'எதையும் சரியாய்க் கவனித்துப் பார்ப்பது கிடையாது, ஆகையால் எனக்குத் திட்டமாகவுந்தெரியாது.

கோ.—எதையுந்தாங்கள் சரியாய்க் கவனித்துப்பார்ப்பதுகிடையாது என்று சொல்கிறீர்களே இதுதானா முறை.

ராம.—எப்படியும் காரியாதி நடந்துகொண்டுதானே வருகிறது.

கோ.—அண்ணா நடந்துகொண்டு வருகிற காரியத்தையும் கவனிப்போம் தங்கள் ஆஸ்தியில் நஞ்சையும், கட்டிடங்களும் ஒரு லட்சரூபா மதிப்புச் சொன்னீர்களே !! இதுகளைப்பற்றி பிரித்து விபரமாகச் சொல்லுங்கள் ?

ராம.—ஒருலட்ச ரூபாச்சொத்துக்கு விபரம் இரண்டு சங்கிலி நஞ்சை நிலம் ரூபா 8000-ம், குடியிருப்பு வீடு ரூபா 60000-ம், பக்கத்திலிருக்கிற கொல்லை நிலம் ரூபா 10000-ம் குதிரை லாயம், காடிஹானா கிரையம், மதிப்பு ரூபா 15000-ம், அன்ன சத்திரம் வைத்திருக்கிற கட்டிடம் ரூபா 7000-ம், இந்த விபரப்படி ஒரு லட்சரூபாய்

கோ.—நஞ்சை நிலம் சொன்னது சரி, குடியிருப்பு வீடு முதலயது பூர்வீகமானதா ? அல்லது பிந்திக்கட்டினதா ?

ராம.—குடியிருப்பு வீடு முதலானது என் தகப்பனார் காலத்திற்குப் பிந்தி நான் கட்டினதுதான்.

கோ.—தங்களுடைய தகப்பனார் காலத்தி[illegible] வீடு முதலானது எத்தன்மையாயிருந்தது ?

ராம.—என் தகப்பனார் காலத்திலிருந்த வீடு ரெம்பக் கேவலம் [illegible]பா ஆயிரங்கூட மதிப்பாக ம[illegible]டாது.

கோ.—அண்ணா, ஆயிர ரூபாகூட மதிப்பாகமாட்டாதவீட்டில் [illegible]

O-,ட்சபது; I
N14/5

117400

தங்கள் இவ்வளவு தூரம் செலவு செய்யலாமா? அறுபதினாயிரம் ரூபா மதிப்புச்சொல்லுகிற வீட்டுக்கு நீங்கள் செலவு செய்தது எவ்வளவு?

ராம:—என்னுடைய தகப்பனார் காலத்தில் இவ்வளவு வியாபாரப்பெருக்கமும், மதிப்புங்கிடையாது. வீட்டுக்கு நான் செலவு செய்தது ரூபா நாற்பதினாயிரந்தான். இப்பொழுது இதின் மதிப்பு ரூபா அறுபதினாயிரம்.

கோ:—அண்ணா, வியாபாரம் அதிகமாக நடக்கிறதை அநுசரித்து வீட்டுவேலையைப் பெரிதாய் முடித்து விடுகிறதா? தங்களுக்குக் கிடைத்திருப்பதாகச் செலவுசெய்து வீட்டைக்கட்டி மறுபடி அதை மதித்துப் பார்த்தால் வாங்குகிறவர்கள் தாகத்துக்குத் தக்கபடி கிரையம் குறையுமேயொழிய கூடுதலான மதிப்பாக மாட்டாதே.

ராம:—வியாபாரம் நடப்பதை யநுசரித்து எல்லோருக்கும், கனிசமாய்த் தெரியும்படி சரியான வீடு கட்டத்தானே வேண்டியிருக்கிறது, எனக்கு ஊரில் காரியத்தனமுமுண்டு. பெரியமனுஷரெல்லாம் என்னைக்கண்டு பேசுவதற்கு வீடுதேடி வருகிறார்களே இந்தத் தன்மையிலிருக்கும்போது வீடு சரியானதாயில்லாவிட்டால் என்னை மதிப்பார்களா? வீட்டை அறுபதினாயிரமானாலுங் கொடுக்கப் போகிறேனா? இந்தவூரில் இதுதான் மேலான வீடென்றுமதிக்கவேண்டும்.

கோ:—அண்ணா தங்களுக்குக் காரியத்தனம் கிடைத்திருப்பது சரி, அது மூலமாய்த் தங்களுக்கு ஏதேனும் வரும்படி உண்டா?

ராம:—தம்பி காரியத்தனத்தின் மூலமாய்வரும்படி கிடையாது.

கோ:—அண்ணா, இப்படி வரும்படியில்லாத காரியத்திற்காகப் பெரிய வீடாகக் கட்டியும் இதை அடுத்த தோரணையாகக் குதிரை வண்டி முதலானவைகளையும், அமைத்து வைத்துக் கொண்டிருப்பதில் உங்களுக்கு என்ன நன்மை?

ராம:—எல்லாவற்றையும் நான் அநுபவிப்பதோடு பிரத்தியாருக்குமதிப்பாகவும், தெரிகிறதல்லவா.

கோ:—அநுபவிப்பதும், அளவையாகத்தானே யிருக்கவேண்டும், காரியத்தனமென்பதென்ன?

ராம:—ஊர்ப்பஞ்சாயத்து, கோவில் விசாரிப்பு, முதலானதும் என் சொல்லை யநுசரித்து நிற்கும்.

கோ:—ஊரில் கோவில், கைங்கிரியத்திற் குரிய காரியத்தனங் கிடைத்திருப்பது ரெம்பச் சிலாக்கியந்தான், ஆராதனைக் காலங்கள் தோறும் போய்த் திட்டம் பார்த்து சுவாமி தரிசனையும் செய்து வருவதோடு மற்றக்காரியாதிகளையெல்லாம் சரிபார்த்து வருவதுண்டா?

ராம:—நான் கோவிலுக்குப் போனதே கிடையாது, மூலஸ்தானம் எந்த முகமாயிருக்கிறதென்பது கூடத் தெரியாது,

கோ:—கோவிலுக்குப், போன இல்லையென்று சொல்லுகிறீர்களே இந்த நிலைமையில் கோவில் காரியம் செவ்வையாய் நடக்குமா? சனோபகாரமான விஷயமாய் எதைக் கவனித்துவிடுவீர்கள், உங்களிடமிருக்கும் காரியத்தனத்தின் மூலமாய் எந்தச்சனங்களுக்குச் சிலாக்கியத்தைக் கொடுக்கும் விபரமே தெரியாத நீங்கள், காரியத்தனத்தைச் செய்வானேன்?

ராம:—நான் காரியத்தனம் பார்க்காது போனால் வேறு யார் பார்த்து விடுகிறது.

கோ:—அன்று, தாங்கள் காரியத்தனம் பார்த்தது போதும், உங்களுக்குக் காரியத்தனத்தைக் கொடுத்தவர்களைப் பற்றிக்குறை சொல்ல வேண்டியதைத் தவிர வேறில்லை, அன்ன சத்திரமென்று சொன்னீர்களே அதுவென்ன?

ராம:—என்னுடைய சொந்தத்திலிருந்து வருஷத்தில் இரண்டாயிரம் ரூபா செலவுசெய்து இனாம்பிராமணர்களுக்குப்போசனம் நடந்துவருகிறது.

கோ:—அன்று தங்களுடைய பணத்தையும் பாழாக்கி அவர்களையும் சோம்பேறிகளாக்குவதற்கு யோசனை சொன்னது யார்? அதிற் சாப்பிடுகிறவர்கள் சம்பாத்தியம் செய்ய லாயக்கில்லாதவர்கள் தானா? அப்படிச் சம்பாத்தியஞ் செய்ய லாயக்கில்லாதவர்களிலும் எல்லாச்சாதியாருக்கு மென்றில்லாமல் பிராமணருக்கு மாத்திரமென்று வைப்பானேன்?

ராம:—தம்பி கோவிந்தா சத்திரத்தில் சாப்பிடுகிறவர்களெல்லாம் நல்ல திடகாத்திரமுள்ளவர்கள் தான்; பிராமணர்களுக்குச் சே

துபோடுவேனுதான் மேலானதருமமென்று சொன்னார்கள், அதினாலேதான் அந்தப் படிசெய்தேன்.

கோ:—அன்றே இப்படி யுக்திக்கு எட்டாதகாரியமாக ஊதாருக்காரர்கள் வார்த்தையை நம்பி வீணாய்ச் செலவு செய்தீர்களே! நகை முப்பதினாயிர ரூபா மதிப்புச்சொன்னீர்களே! அவ்வளவு நகை யெதற்கு, மாசந்தோறும், எவ்வளவோ வட்டி நஷ்டத்தை யுண்டு பண்ணிக் கொண்டிருக்கும், மேலும் விற்கக்கூடிய காலத்தில் பூராப் பணத்துக்கும் காணுமா ?

ராம:—இவ்வளவு நகைவேண்டிய தாகத்தானிருக்கிறது, இவைகளிலெல்லாம் வட்டிக் கணக்குப் பார்த்துக்கொண்டிருக்கலாமா ? நாம் விற்பனை செய்வதற்காக வாங்கியிருந்தா லல்லவா முதலுக்குக் காணுமாவென்று பார்க்கவேண்டும்.

கோ:—அன்றே இப்போது நடந்து வருகிற கபோசி வருஷத்துப் பற்றுவழி தங்களுக்கு என்ன ஆகியிருக்குமெ தெரியுமா ?

ராம:—இவ்வருஷத்துப் பற்றுவழி ரூபா பதினாயிர மிருக்குமென்று நினைக்கிறேன்,

கோ:—அப்படியானால் பதினாயிரம் ரூபாவுக்கும் ஒரு மதிப்பாய்ச் செலவு விபரம் சொல்லுங்கள்.

ராம:—இந்த வருஷத்துப் பற்றுவழி விபரம், சாப்பாட்டுச் செலவு மற்றச் சில்லரைச்செலவுமாக ரூ. 4000-ம் மாடு குதிரை வண்டி இது சம்பந்தமானது ரூ. 3000 ம் அன்ன சத்திரத்திற்கு ரூ 2000 வீடு ரிப்பேர்ச் செலவு ரூ. 2000-ம் பௌத்திரன் சேனைக் கொண்டாட்டம் ரூ. 500. ஷை குழந்தைக்கு நகை ரூ 1000-ம் ஷை குழந்தைக்குக் காது குத்தல் செலவு ரூ. 1000-ம் ராமேஸ்வர யாத்திரை போய் ஷை குழந்தைக்கு முடி யெடுத்த செலவு ரூ. 2000-ம் என்னுடைய தா[illegible] காலஞ்சென்ற அபரக்கிரியைச்செலவு ரூ. 2000-ம் ஆடி[illegible]வழி [illegible]ப் பொங்கல் செலவு ரூ. 1000-ம் பௌத்திரி ருதுசோபனக்கொண்டாட்டம் ரூ. 2000-ம் கிரக சாந்தி கழிப்பதற்கு செலவு ரூ. 1000-ம்; யாசகம் வெகுமானம் கொடுத்தவகையில் ரூ. 2000-ம் [illegible] வாக்கியதில் ரூ. 2000-ம் ஆக ரூ. 25500.

கோ:—அண்ணா, தங்கள் காரியம் பெரிய டம்பாசாரியைப் பே விருக்கிறதே யொழிய ஒருவித கிராஷ தமோ கொள்ளதாகத் தெரியவில் லையே, இனிமேல் உங்களுடைய கதையைப் பற்றிக்கேட்டுக் கொண் டிருப்பது பிரயோசனமில்லை தாங்கள் இவ்விடம் வந்தது எதற்காக செப்பு புடைப்பாகத் தெரிகிறதே என்ன சாமானிருக்கிறது?

ராம:—நானிவிடத்துக்கு ஒரு காரியமாகவந்தேன் செப்புக்குள் செடிகாரமும் மணிப்பாக்குமிருக்கிறது.

கோ:—அண்ணா. தாங்கள் இங்கு வந்தது சொல்லக்கூடாத ரகசியமான காரியமா? மணிப்பாக்குக்குள் பணமிருக்கிறதா?

ராம:—சொல்லக்கூடாத ரகசியம் ஒன்றுமில்லை இதோ சொல் லுகிறேன் மணிப்பாக்சுக்குள் 500 ரூபாவுக்குச் சில்லரை நோட்டிரு க்கிறது.

கோ:—அண்ணா இதோ சொல்லுகிறேனென்று சொல்லிக்கொ ண்ட மட்டில் ஒன்றுஞ் சொல்லாமலிருக்கிறீர்கள், ஐநூறு ரூபாச் சில்லரை நோட்டுக் கொண்டுவந்தது எதற்காக?

ராம:—நானிவிடம் வந்த காரியமாவது:- இவ்விடத்தில் ஒரு புள் ளியிடம்ருபாய் 50000ம் வட்டிக்கு வாங்கியிருந்தது அதற்குத்தவணை நாளை இதுவரை தவணைக்குப் பணம் சேரவில்லை: ஆகையால் செடி புள்ளியிடம்கண்டு பேசி வட்டிக்கும் அசலுக்குமாக மறு தவணை போ ட்டுநோட்டெழுதிக்கொடுத்து விடலாமென்று வந்தேன், ஐநூறு ரூபா நோட்டுக் கொண்டுவந்தது வீட்டுக்கு ஏதாவது சாமான்வாங்கிக்கொ ண்டு போகலாமென்று நினைத்துக்கொண்டு வந்தேன்.

கோ:—அண்ணா நீங்கள் வட்டிக்குப்பணம் வாங்கியதும் அந்தப் பணம் செல்லாதாமலிருக்கிற நிலைமையும் பார்த்தால் பெருந்திகி லாகவிருக்கிறது. தவிர செப்புக்கூடத்தில் இவ்வளவு ஆழமாருவ் இருப்பாற்கூடில் எவ்வளவு ஆழமென்பதுபோல் தாங்கள் மறுவர வந்துபோவதற்கு ஐநூறு ரூபா செலவுளுவ் இனிமேல் மற்றவை களைப்பிரித்துப் பேசவானேன், தாங்கள் வந்த சோலியைப் பார்த் துக்கொண்டு வாருங்கள் நானும் போய் வருகிறேன்.

இரண்டுபேரும் பிரிந்தமட்டில் ராமன்வட்டிக்குப்பணம்வாங்கிய இடத்திற்குப்போய் சங்கதிபேசியதில் அவர்கள் தவணைப்படி பணம் வந்துசேரவேண்டுமென்று கண்டிப்பாய்ச்சொல்லிவிட்டார்கள். அதி

விருந்து ராமன் மதிமயங்கி இனிச்செய்யவேண்டியது இன்னதென்
றுணராமல் கோவிந்தனிருக்குமிடந் தேடிவந்து கண்டு நடந்ததைப்
பற்றிச் சொல்லித் தன்னைக்காப்பாற்ற வேண்டுமென்றும், தன்னிட
மிருக்கும் நகைகளைக் கொண்டுவந்து தருவதாகவும், தவணைப் பண
த்தைச் செலுத்திவிட வேண்டுமென்றும் சொல்லிக்கேட்டான் அதற்
குக் கோவிந்தன் ஐம்பதினாயிர ரூபா செலவிட்டுச் சேகரித்த நகை
கையிலிருந்தாலும் இப்பொழுது அதை வைத்துக்கொண்டு ரூபா
பதினாயிரங்கூடத் தருவதற்கு யோசிப்பார்களே, மேலும் இப்படிக்
காரியந் திடீரென்று முடியுமா நாளையத்தினம் தவணை யென்றுரை
சொல்லுகிறீர்களே, தவிர இந்த ஐம்பதினாயிர ரூபா மட்டென்றிருக்
காதே இனி எல்லோருக்கும் பணத்தைக் கொடுத்துவிட வேண்டிய
தாகத்தானே யிருக்கும். ஆகையினாலே செல்லவேண்டியவைகளெ
ல்லாம் மொத்தம் எவ்வளவிருக்கும் இதற்கு நிலுவை சரக்கு முத
லானது எவ்வளவிருக்குமென்று கேட்டமாத்திரத்தில்,

ராம — ஐயா இனிமேல் என்னால் கொண்டுசெலுத்தமுடியாது
எல்லோருக்கும் வகைசெய்துதான் கொடுத்துப்போடவேண்டும் செ
லவு சுமார் பத்துலட்சரூபாயிருக்கலாம். இதற்கு நிலுவை நாலுலட்ச
த்துக்கும் சரக்குவகையில் மூன்றுலட்சத்துக்கும் நகை வீடு முதலா
னதில் ஒருலட்சத்துக்குமாக இருக்கிறதென்று சொன்னான். அந்த
மட்டில் கோவிந்தன் ராமனைப்பார்த்து அன்றை ஊருக்குப்போய்
கொழும்பு கணக்குமுடித்து ஐக்கொகைபெடுத்தெழுதுங்கள் நாலு
ம் ஊருக்குப்போய்விட்டு தங்களூர் வந்து சேருகிறேன் என்று சொ
ன்னமாத்திரத்தில் இரண்டுபேரும் தங்கள் தங்களூர்போய்ச்சேர்ந்
தமாத்திரத்தில் கோவிந்தன் மறுபடி பிரயாணமாகி கொழும்புபோய்
ராமனைக்கண்டு கணக்கு விபரம் வாங்கி செல்லும் புள்ளிகளுக்கு ச
மாதானங்கள் சொல்லி சரக்கு நகை வீடு முதலானவைகளையெல்லா
ம் விற்றும் நிலுவைகளை வசூல்செய்தும் வந்ததொகைகளை செல்லும்
புள்ளிகளுக்கு ஈவுபடுத்திக்கொடுத்து பாக்கியையும் அடுத்தவருப்ப
டியிலிருந்து தருவதாகச்சொல்லச்சொல்லி முடித்து மேலிட்டு கொ
ழும்புக்கடையைத்தன்பேருக்கு கோவிந்தன் கணக்குப்போட்டு தன்
னுடைய மேல்பார்வையிலேயே வியாபாரத்தைநடத்தி அதில் கிடை
க்கும் லாபத்தில் ராமனுக்கும் ஒருபாகமாகப்பிரித்து கொடு பணத்திலிரு
... ... புராவும் நிர்க்கப்பட்டதோடு மறுப

டி ராமனுடைய காரியங்களும் மெய்ப்பிரதானமாய் நல்ல நிலைமையாக வும் வந்துவிட்டது ராமனென்றாலும் படிக்காமல் பிள்ளைகளையும் படிப்பிக்காத தன்மையாலும் ஏமாற்றுக்காரர்கள் வசப்பட்டு தெம் மாடித்தனமாய் நடந்து ஆபத்தை உண்டாக்கிக்கொண்ட காரியம் நல் ல மனிதருடைய சிநேகமிருந்ததிலிருந்து மறுபடியும் மேன்மையை அடையலாயிற்று சுபம்!

இருவருக்கும் சம்பாஷணைகள் முற்றும்.

—◦◦◦—

ராஜவாழ்த்து.

மன்னவர் மன்னனாகி மாநிலமுழுதுங்காக்கும் (ண்ட
பொன்னவிர் முடியான்சார்சுப்புரவலன்வலக்கைகொ
தன்னிகரிலாதசெங்கோல் தரணியெல்லாம்வாழி
அன்னவன்சுற்றமெல்லா மாலெனத்தழைத்துவாழி.

19 10

உ
சிவமயம்.

பழமொழிகள்.

[stamp]

முதலுளபண்டங்கொண்டு வாணிபஞ்செய்
ததன்பயனுண்ணு வணிகரும்பதரே.
வித்துமேறு மூளவாயிருப்ப
எய்த்தங்கிருக்கு மேழையும்பதரே
அஃகமுங்காசுஞ் சிக்கெனத்தேடு
சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்
திரைகடலோடியுந் திரவியந்தேடு
தேடாதழிக்கிற் பாடாய்முடியும்
மிஞ்சியசெலவு மேன்மையைக்கெடுக்கும்
பொருள்தனைப் போற்றிவாழ்
ஊண்மிச்சம் உழவிலுமில்லை
காசுக்கு எட்டுச் சட்டிவாங்கி சட்டியொன்று
இக்காசுக்கு விற்றாலும் வட்டிக்குக் கட்டாது.
வித்தியாதரனை விரும்பிப்படித்திடு.

இராமலிங்கக்குருக்கள்,

புரோப்ரைட்டர்

சச்சிதானந்தம் பிரஸ்,

விருது...